1989 மார்ச் 30]

* **மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் திரு. வீரபாண்டி ஆறுமுகம் அவர்களும், சட்டமன்ற உறுப்பினர் திரு. சுப்பிரமணியம் அவர்களும் ஜெனரல் மருத்துவ மனையிலே-அரசினர் பொது மருத்துவ மனையிலே- அனுமதிக்கப்பட்டு, சிகிச்சை பெற்று வருகிறார்கள். அவர்களுக்கு என்று ஒரு பேனல் ஆப் டாக்டர்ஸ் 4, 5 பேர் அமைக்கப்பட்டு, அவர்களே கவனித்து வருகிறார்கள்.

எதிர்க்கட்சித் தலைவர் செல்வி ஜெயலலிதா அவர்கள், தனியார் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகிறார்கள். அவர்களும் விரும்புவார்களானால், ஒரு பேனல் ஆப் டாக்டர்ஸ் நிச்சயமாக இந்த அரசு சார்பாக அமைக்கப்படும் என்பதைத் தான் இப்போது என்னால் சொல்ல இயலும்.

திரு. எம். அப்துல் லத்தீப் : மாண்புமிகு எதிர்க்கட்சி தலைவர் அவர்களைக் குறித்து, அரசு அக்கறை கொண்டிருக்க வேண்டாமா ? அவரது உடல்நிலை குறித்து தகவல் சேகரித் திருக்க வேண்டாமா ? இதுவரையில் அவர்களுடைய உடல் நிலை என்ன மாதிரி இருக்கிறது என்பதைப் பற்றி அரசு தகவல் சேகரித்தாவது, அல்லது அரசே தன்னிச்சையாக டாக்டர்களை அனுப்பியாவது, அவரது உடல் நிலை எப்படி இருக்கிறது என்பதை அறிந்து, இந்த மன்றத்திற்குத் தெரிவிப்ப தற்கு நடவடிக்கை மேற்கொண்டிருக்க வேண்டாமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : அதை, அவர்கள் விரும்பினால்தான் செய்ய இயலும். நாமாகச்செய்ய இயலாது. நாமே சில டாக்டர்களை அனுப்பிவைப்பதன் மூலமாக, அதைக் குறித்து வேறு செய்திகள் பரப்பிவிடப்பட்டாலும் பரப்பி விடப்படலாம் எனவே, அவர்கள் விரும்புவார்களானால் எத்தனை டாக்டர்களை வேண்டுமானாலும் பேனல் ஆப் டாக்டர்களாக அமைப்பதற்கு அரசு தயாராக இருக்கிறது.

2. தகவல் கோரல்— தொடர்ச்சி.

(ஈ) உறுப்பினர்கள் கொடுத்துள்ள அறிவிக்கைகள்—தொடர்ச்சி.

திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தாங்கள் புன்முறுவலோடு பேசுகிறீர்கள். அது மகிழ்ச்சியாக இருக்கிறது. இதேபோல் அவை நடக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டீர்கள். நாங் களும் ஒத்துழைப்புக் கொடுக்கிறோம்—ஒத்துழைப்பைக் கொடுத் தோம்.

ஒத்திவைப்புத் தீர்மானத்தைப் பற்றி பேசும்படி அழைக்கப் பட்டதற்குப் பின்னால் '' I will speak only on the point of order I have raised '', என்று, எந்த உறுப்பினரைத் தாங்கள் அழைத்தீர்களோ அந்த உறுப்பினர், தேவையில்லாமல் இங்கே ஒரு பாயிண்ட் ஆப் ஆர்டரை எழுப்பினார்கள். அதேபோல் நான் உங்களிடத்திலே உங்கள் அறையில் பேசுகிற நேரத்தில் என்னுடைய உரிமை மீறல் தீர்மானத்தைத் தாங்கள் எடுத்துக் கொள்ள வேண்டும். அதற்குத் தாங்கள் எனக்குத் தந்திருக்கிற

[திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம்] [1989 மார்ச் 30

பதில் சரியில்லை என்று நான் சொன்னேன். என்னுடைய உரிமை மீறல் தீர்மானம்-நான் 27 ஆம் தேதி காலையிலே கொடுத்தேன். 25 ஆம் தேதி அவையில் நடைபெற்ற நிகழ்ச்சியைப் பற்றிய தாகும். உரிமை மீறல் என்று சொன்னால் - அவையில் செயல் படுகிற உறுப்பினர்கள் அச்சமின்றிச் சுதந்திரமாகச் செயல் படுவதற்கு வழி வேண்டும் - அனுமதி வேண்டும். இங்கே செயல் படுகிற நேரத்தில், இங்கே கலந்து கொள்கிற நேரத்தில் அடியும் மிரட்டலும்தான் என்று சொன்னால், சுதந்திரமாகச் செயல்பட முடியாது. நீங்கள் அவைத் தலைவராக இருக்கிறீர்கள். எங் களுக்குப் பாதுகாப்பு என்று சொன்னால் உங்களிடத்தில்தான் வந்தாக வேண்டும். நான் உரிமை மீறல் பிரச்சினையை எழுப்ப வேண்டும் என்று தங்களிடம் கேட்டுக் கொண்டேன். அந்த உரிமை மீறல் பிரச்சினைபற்றி நான் இப்போது பேசவில்லை. ஆனால், உரிமை மீறல் பிரச்சினையை எழுப்ப அனுமதி வேண்டும் என்று மட்டும்தான் கேட்கிறேன். அதைப் பின்னால் எழுப்பு கிறேன் என்று ஏற்கெனவே உங்களிடத்திலே ஒப்புக் கொண் டேன். காரணம், இங்கே சுமுகமாக நடக்க வேண்டும் என்று தாங்கள் விரும்பினீர்கள். நிச்சயமாக இந்த அவையிலே நிகழ்ச்சி கள் சுமுகமாக நடைபெற்றாக வேண்டும். நிதிநிலை அறிக்கையைத் தாக்கல் செய்து, இங்கே அவையில் விவாதம் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. மக்களுடைய பிரச்சினைகள் முழுமையாகப் பின்னுக்குத் தள்ளப்படக் கூடாது என்பதை நான் ஏற்றுக் கொள்கிறேன். என்றாலும் கூட, நீங்கள் எவ்வளவோ கேட்டுக் கொண்ட பிறகும் அவர்கள் பாயிண்ட் ஆப் ஆர்டர் எழுப்பிய காரணத்தால் நானும் எழுப்ப விரும்புகிறேன்.

அதைப் போலவே, நேற்றைய தினம் மாண்புமிகு முதலமைச் சர் அவர்கள் - அவர் 50 ஆண்டுக் காலம் அரசியலில் இருந்து பொன்விழா கொண்டாடியவர் - 7 முறை சட்டமன்றத்திற்குத் தேர்ந்தெடுக்கப்பட்டவர் - ஒருமுறை மேலவைக்குத் தேர்ந் தெடுக்கப்பட்டவர் - 30 ஆண்டுக் காலம் சட்டமன்ற உறுப்பின ராக இருந்தவர் - எதிர்க்கட்சியினுடைய துணைத் தலைவராக வும் இருந்திருக்கிறார்கள்...

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: மாண்புமிகு தலைவர் அவர்களே, 25-ஆம் தேதி அன்று சமர்ப்பிக்கப்பட்ட நிதிநிலை அறிக்கையின் மீது கிட்டத்தட்ட 27, 28, 29 மற்றும் 30 ஆகிய 4, 5 நாட்களாக எந்தவிதமான விவாதத்திலும் கலந்து கொள்வ தில்லை என்ற ஒரு முடிவோடு எதிர்க்கட்சி உறுப்பினர்கள் சிலர் முடிவு செய்து இருப்பது நாட்டுக்கு நல்லதுதானா என்பதை அவர்களே எண்ணிப் பார்க்க வேண்டும். அவர்களுடைய தொகுதிப் பிரச்சினைகளே எத்தனையோ இருக்கின்றன. வரவு செலவுத் திட்டத்தில் விடுபட்டுப் போனவைகள் இருக்கலாம். குறைபாடு கள் இருக்கலாம். அல்லது நான் அறிவித்திருப்பதில், இன்னின்ன திருத்தங்கள் தேவை என்று சொல்லலாம். இவைகளைப் பற்றி யெல்லாம் சொல்லுவதற்கு அக்கறை எடுத்துக் கொள்ளாமல்

1989 மார்ச் 30] [டாக்டர் மு. கருணாநிதி]

ஒவ்வொரு நாளும் இந்த அவையில் வரவு-செலவுத் திட்டம் பற்றி விவாதம் நடப்பதற்கு இடையூறாக இப்படி எழுந்து பேசிக் கொண்டிருப்பதைத் தாங்கள் அனுமதிக்கிறீர்களா என்பதைத் தான் நான் முதலில் தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

(உறுப்பினர்கள் திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியமும், திரு. எஸ். திருநாவுக்கரசும் எழுந்து பேச முயன்றனர்.)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் எல்லாம் உட்காரலாம். திரு. அப்துல் லத்தீப் அவர்களை, முறைப்படி ஒரு ஒத்தி வைப்புத் தீர்மானத்தை முன்மொழியச் சொன்னேன். அது என்ன என்று சொல்ல வேண்டுமே தவிர இப்படி ஒழுங்குப் பிரச்சினையை அவராகவே எழுப்பக்கூடாது. இது ஒன்று. இரண்டாவது, 25 ஆம் தேதியன்று நடைபெற்ற நிகழ்ச்சிகள் தொடர்பாக எழுப்பப்பட்ட உரிமை மீறல் பிரச்சினைகள், ஒத்திவைப்புத் தீர்மானங்கள் அத்தனையும் அலுவல் ஆய்வுக் குழுக் கூட்டத்தில் முழுமையாக ஆராயப்பட்டு, அவற்றினுடைய தன்மைகள் முழுமையாக ஆராயப்பட்டு அது தொடர்பாக எந்த ஒத்தி வைப்புத் தீர்மானத்திற்கும், உரிமை மீறல் பிரச்சினைக்கும் அனுமதி முற்றாக மறுக்கப்படுகிறது என்பதை இந்த அவையிலே சொல்லி, திரு. அப்துல் லத்தீப் அவர்கள் ஒத்திவைப்புத் தீர்மானத்தைப் பற்றித் தொடங்குகிறார்களா அல்லது அடுத்தவரைத் தொடங்கச் செய்யட்டுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 10-10)

4. ஒத்திவைப்புத் தீர்மானம்—தொடர்ச்சி.

சேலம் மாவட்டம் ஆத்தூரில் நடந்த வன்முறையால் சிறுபான்மை மக்களுக்கு ஏற்பட்டுள்ள நிலைமை—தொடர்ச்சி.

திரு. எம். அப்துல் லத்தீப் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, நான் கொடுத்திருக்கிற ஒத்திவைப்புத் தீர்மானத்தை இந்த அவையின் முன் சமர்ப்பித்துக்கொண்டு ஏன் பேரவையை ஒத்திவைக்க வேண்டுமென்பது குறித்து என்னுடைய சில கருத்துக்களை நான் அவை முன் வைக்க விரும்புகிறேன். அண்மைக் காலமாக தமிழகத்தில் அமைதிச் சோலையாக இருக்கிற தமிழகத்தில் பிரச்சினைகளை, பல்வேறு சமுதாயங்களுக்கு இடையே பிரச்சினைகளை ஏற்படுத்தக் கூடிய அளவுக்கு, குறிப்பாக சிறுபான்மை சமுதாயமாக இருக்கிற இஸ்லாமிய சமுதாயம் ஒரு பயந்த சூழ்நிலையில் வாழக்கூடிய அளவுக்கு சிலருடைய நடைமுறைகள் அமைந்திருப்பதும், அதே நேரத்தில் ஆண்டாண்டு காலமாக நாம் கடைப்பிடித்து வருகிற மரபுக்கு மாறாக செயல்பட்டுத்தான் தீரவேண்டுமென்று அவர்கள் நடப்பது மட்டு